முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1111

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.10.2022, வெள்ளிக்கிழமை

1. பார்காக்க வந்த சற்குருவே அரங்கா
பாமரர்க்கும் ஞானம் அருளும் ஞான தேசிகா
சீர்திருத்தம் பேருலகில் செய்து இனிதே
சித்திமிகு ஞானவான்களை படைக்க
2. படைக்கவே என் அவதாரமாக
பழுதின்றி அற்புதம் நிகழ்த்தும் ஞானதேசிகா
தடையற அரங்கன் உந்தனுக்கு
தனிகாசலன் யானும் ஞான அறிவுரை ஆசி
3. ஆசிதனை சுபகிருது நங்கை திங்கள்
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 27 ம் நாள் 14.10.2022, வெள்ளிக்கிழமை)
அரங்கனுக்கு ஆற்றல்கூட தொடர்ந்துரைப்பேன்
வாசிவென்ற ஞானவான்கள் பலபேரை
வையகத்தில் படைத்து ஞானிகளாக
4. ஆகவே கலியினிலும் அற்புதத்தை
ஆற்றல்பட நிகழ்த்துவேன் என சபதமிட்டு
சபதமிட்டு என் சடாட்சர சூட்சுமமாக
சகலருக்கும் வரம்தர ஞானம் அருளும்
5. அருளுகின்ற அரங்கனே ஞான தேசிகனே
அப்பனே உன்னுள் யானிருக்கேன்
வரம் தந்து உன் கரம் வழி வரும் உலகோர்க்கு
வையகத்தில் பேராற்றல் வழங்கி வருகின்றேன்
6. வருகவே உன் தொடர்பு கொண்டவர்க்கு
வடிவேலன் என்னருள் உண்டு உண்டு
முருகா என எங்கெல்லாம் நாமஜெபங்கள்
முழுமைகொண்டு உனை எண்ணி சொல்கின்றாரோ
7. சொல்கின்ற மக்கள்கள் அனைவருக்கும்
சூட்சுமமாய் இறங்கி பெரும் பாதுகாப்புத் தருவேன்
தருகவே உன் தர்மம் ஏற்றவர்க்கு தவமாக தானமாக தக்க பல சூட்சுமமாக
ஆகவே இறங்கி அற்புதம் நடத்தி அழியாமை தந்து உலகோரை மீட்பேன்
8. மீட்பேன் உன் ஞானமாகவும்
மீட்பேன் உன் தர்மமாகவும்
மீட்பேன் உன் சன்மார்க்கமாகவும்
மொழிந்திட்ட ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–